**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 131/2021**

**07.02.2025.**

**Accused 1,2, 3 present.**

**அ.சா. 15 குமார் த/பெ. ராமகிருஷ்ணன்,**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி -**

சாட்சி மீனா 2 வது எதிரியிடம் சண்டை போட்டுவிட்டு "நீ உன் வீட்டிற்கு போய்விடு என் தம்பியிடம் சண்டை போடாதே " என்று சொல்லிவிட்டு தான் சென்றுவிட்டதாக எனது விசாரணையில் சொல்லவில்லை. எனது விசாரணையில் சாட்சி மீனாவிடம் 2 வது எதிரி மீனா தம்பி இரவு முழுவதும் சண்டை போட்டதால் வேலைக்கு வரவில்லை என்று சொல்லவில்லை . சாட்சி மீனா 2 வது எதிரியின் வீடு பூட்டப்பட்டிருந்தது என்றும் அவர் பக்கத்து வீட்டில் இருந்து என்னிடம் பேசினார் என்று எனது விசாரணையில் சொல்லவில்லை. சாட்சி மீனா வீட்டில் இருந்தபோது 2 வது எதிரி அவரை வந்து அழைத்ததாக சொல்லியுள்ளார் . சாட்சி மீனா தான் சென்று பார்த்தபோது "அடித்து போட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தார் " என்று சொல்லியுள்ளாரா என்றால் இரத்த வெள்ளத்தில் கிடந்ததாக சொல்லியுள்ளார்.. சாட்சி மீனா 2, 3 எதிரிகள் ரமேஷ் உடலை இருசக்கர வாகனத்தில் வைத்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொல்லவில்லை . சாட்சி மீனா 1ம் எதிரியின் கள்ள தொடர்பினால் தான் தன் தம்பி இறந்தார் என்று எனது விசாரணையில் சொல்லியுள்ளார்.

2) நான் சாட்சி 3 கமலநாதனை அவர் தெருவில் வைத்து விசாரித்தேனா என்றால் சம்பவம் நடந்த தெருவில் வைத்து விசாரித்தேன் . அவரை நான் ஒரு முறை தான் விசாரித்தேன். 07.03.2017 ம் தேதியன்று காலை ரமேஷ் வீட்டை தாண்டி சென்றபோது சாட்சி மீனாவின் குரல் கேட்டு சாட்சி கமலநாதன் போய் கேட்டதாக எனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் 8 ம் தேதியன்று நள்ளிரவு போய் கேட்டதாக சொல்லியுள்ளார்.

(2) சாட்சி கமலநாத் தான் சென்று பார்த்தபோது ரமேஷ் அவர் வீட்டில் பிணமாக கிடந்தார் என்று சொல்லியுள்ளாரா என்றால் எதிரிகளின் குற்றம் பற்றி சொல்லிவிட்டு இறந்ததாக சொல்லியுள்ளார். சடலத்தை வைத்து வெளியே எடுத்து வைத்தோம் என்று கமலநாதன் என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை . அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் சடலத்தை சாலையில் வைத்து மறியல் செய்ததாக கமலநாத் சொல்லவில்லை.

(3) 08.03.2017 ம் தேதியன்று மாலை காவல் நிலையத்தில் சாட்சி அமலாவை நான் விசாரணை செய்யவில்லை. 07.03.2017 ம் தேதியன்று இரவு 8.00 மணிக்கு 2 வது எதிரி சரண்யா அவர் கணவரை துடப்பத்தால் அடித்ததாக நேரில் பார்த்ததாக சாட்சி அமலா சொல்லவில்லை. சாட்சி பாஸ்கரனை நான் தென்னமரத்தெருவில் தான் விசாரித்தேன். பார்வை மகஜரில் சம்பவயிடம் தென்னை மரகுறுக்கு தெரு என்று உள்ளது என்றால் சரிதான் . கைப்பற்றுதல் மகஜரில் தென்னை மரத்தெரு என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் . தென்னைமரத்தெருவில் உள்ள ரமேஷ் என்பவரின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டது..

(4) சாட்சி பாஸ்கர் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் தன் முன்னிலையில் உடைந்த வளையல்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளார். 09.03.2017 காலை 8.50 மணிக்கு தயார் செய்த மகஜரில் கயிறு கைப்பற்றியதாக குறிப்புகள் இல்லை . 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் 10.03.2017 ம் தேதியன்று காலை 6.30 மணிக்கு ஆரம்பித்து 7.45 மணிக்கு பதிவு செய்துவிட்டேன். 2 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் 7.45 மணிக்கு ஆரம்பித்து 9.00 மணியளவில் பதிவு செய்யப்பட்டது. 3 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் 9.00 மணிக்கு ஆரம்பித்து 10.00 மணியளவில் பதிவு செய்யப்பட்டது . அந்த நேரத்திற்குள் ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டது . ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து முடித்தவுடன் எதிரிகளிடம் கையொப்பம் பெறப்பட்டது .. எதிரிகளை விசாரணை செய்த அதே இடத்தில் தட்டச்சு செய்யப்பட்டது . இறந்த ரமேஷின் உடலை முதன்முதலாக 09.03.2017 ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உள்ள சவக்கிடங்கில் பார்த்தேன்.

அதற்கு முன் அவர் பிரேதத்தை பார்க்கவில்லை . ரமேஷின் உடல் மருத்துவமனையில் இருப்பதாக வழக்கு கோப்பை ஒப்படைத்தபோது உதவி ஆய்வாளர் என்னிடம் கூறினார் . வழக்கு கோப்பு என்று நான் சொல்வது முதல் தகவல் அறிக்கை தான்.

5) ரமேஷ் எப்போது, எந்த முறையில் இறந்தார் என்று நான் சரியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல . ரமேஷின் உறவினர்களான சாட்சிகள் 100 நபர்களை சேர்த்துக்கொண்டு ரமேஷின் உடலை மங்கலம் டு அவலூர்பேட்டை சாலையில் போட்டு சாலை மறியல் செய்தார்கள் என்றால் இல்லை . அதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு யாரையாவது குற்றவாளியாக சேர்க்கவேண்டும் என்று ஒரு பொய் புகார் பெறப்பட்டது என்றால் சரியல்ல . அந்த புகாரின் அடிப்படையில் ரமேஷின் உறவினர்களை வைத்து மகஜர் , ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து பொய்யான இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல . நான் இந்த வழக்கில் சாட்சிகள் யாரையும் ஒருநாளும் விசாரித்ததில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்த இடத்திற்கு போகவேயில்லை என்றும் சம்பவயிடத்தில் எந்த வழக்கு கோப்பும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல.. 1, 2 ம் எதிரியும் ஒருநாளும் கள்ளதொடர்பில் இல்லையென்றாலும் நான் கற்பனையாக குற்ற அறிக்கையை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல .. இந்த வழக்கில் எதிரிகளை என்னுடைய கட்டுப்பாட்டில் வைத்து குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு அடித்து துன்புறுத்தினேன் என்றால் சரியல்ல. அதன் காரணமாக 1வது எதிரி 1 வாரம் சிறையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரியல்ல . இந்த வழக்கில் தனி நபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன் வராததால் ரமேஷின் உறவினர்களை வைத்து குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . 1, 2 வது எதிரிகள் கள்ளதொடர்பில் இருந்தார்கள் என்பதை உறுதிபடுத்த ஆவண சாட்சிகளை கைப்பற்ற நான் முயற்சி செய்தேனா என்றால் முயற்சி செய்தேன். அத்தகைய ஆவணமே கிடைக்கவில்லை. இந்த வழக்கில் ரமேஷின் மரணத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென்றால் சரியல்ல.

எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்றால் சரியல்ல . நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-B.C. Gopinath.,
Additional District Judge,
Tiruvannamalai.